Mukhya Sevikas.

* 438 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether it is a fact that Mukhya Sevikas of the Women's Welfare Department are serving the Department without any rise in their emoluments and getting their basic pay alone according to the recommendations of the Pay Commissions of 1960 and 1970 ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, விமன்ஸ் வெல்பேர் டிபார்ட்மெண்ட் கான்ஸ்டிட்யூட் செய்தபோது சோஷியல் வெல்பேர் போர்டிலே வேலைசெய்துவரக்கூடிய முக்கிய சேவிகாக்களுக்கு 1961-ஆம் ஆண்டு 1433 ஜி.ஓ. பிரகாரம் பாதுகாப்பு அளிக்கப்பட்டும்கூட அந்த பாது காப்பு அமல் நடத்தப்படவில்லை என்பது உண்மையா ? அதை அமல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதலிலே 73 வரை யிலும் அப்படிப்பட்ட நிலைமைதான் இருந்தது. ஆனால், 17, அக்டோபர் 1973 லிருந்து ஏறத்தாழ 308 முக்கிய சேவிகாக்கள் ரெகுலரைஸ் செய்யப்பட்டு அவர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு ஆணையிட்டிருக்கிறது. கணக்கு எடுத்து அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர்களே, பே கமிஷனுக்கு முக்கிய சேவிகாக்களுடைய பே ஸ்கேலைப்பற்றி டிபார்ட்மெண்ட் எடுத்துக் கூறாததால்தான் இது உயர்த்தப்படாமல் இருக்கிறது என்பது உண் மையா ? அதற்கு என்ன ஆவன செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அந்த நிலைதான் இருந்தது. ஆனால் 1973-ஆம் ஆண்டு அக்டோபரிலே அந்த நிலை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*439. வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) நொய்யல் ஆற்று அணைக்கட்டுத் திட்டத்தின் ஆய்வு அறிக்கைகள் (Investigation and Estimates) அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டனவா ?

(இ) இப்பணி எப்பொழுது துவங்கும்?